**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.226/2024 - PW- 8**

| | |
|---|---|
| Name | திரு. சிரஞ்சீவிலு |
| Husband/Father Name | முனுசாமி |
| Village /Area | திருத்தணி |
| Taluk | திருத்தணி |
| Occupation | காவல் உதவி ஆய்வாளர் |
| Age | 59 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.11.2025.

**(எதிரிகள் 2, 4, 5, 6 ஆஜர். எதிரி 1 மற்றும் 3 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.01.2024 அன்று இரவு 23.30 மணியளவில் நான் நெமில் காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது திரு. சிவக்குமார் வயது 49 த/பெ. பரசுராமன், எண். 161இ அண்ணா சாலை மூலப்பட்டு, நெமிலி இவர் புன்னை அரசு மதுப்பானக்கடையில் எண். 11018 கடையில் உள்ள விற்பளையாளர் ஆவார. .

வாதியானவர் தானும் தன்னுடன் விற்பனையாளராக இருக்கும் பாலசுப்பிரமணியம் மற்றும் ெஹல்பர் வேலை செய்யும் கல்வாடி கிராமத்தை சேர்ந்த முனுசாமி மகன் பாபு ஆகியோர் கடையில் இருந்த போது அப்போது பாலசுப்பரமணியம் என்பவர் கடைக்கு உள்ளே கணக்கு வழக்கு பார்த்துக் கொண்டிருந்ததாகவும், வியாபரம் செய்துக்கொண்டிருந்த பாபு இரவு சுமார் 07.00 மணியளவில் மேற்படி கடையில் இரும்பு கதவினை திறந்துக்கொண்டு சிறுநீர் கழிக்க சென்ற போது அப்போது கடைக்கு வந்த ஒரு நபர்

விற்பனையாளர் சிவக்குமாரிடம் பீர் பாட்டிலை கொடுக்குமாறு கேட்ட போது அவர் பணம் கேட்கவும், மேற்படி அடையளாம் தெரியாத வந்த நபர் தன் கையில் வைத்திருந்த கத்தியால் பூட்டியிருந்த கதவின் மீது கத்தியால் தாக்கிய போது கதவு திறந்துக்கொண்டதும் உள்ளே அட்டை பெட்டியில் கணக்கு பார்த்து கட்டு கட்டாக வைத்திருந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து சென்று விட்டதாகவும் அப்போது கடைக்கு பாட்டிலை வாங்க வந்த சுமார் 60 வயது மதிக்கதக்க கொல்லாபுரி மகன் ஆறுமுகம் மீது அவர் வைத்திருந்த கத்தியை காட்டி மிரட்டி விட்டு ரோட்டில் பானாவரத்தை நோக்கி இருவருடன் நிறுத்தியிருந்த மோட்டார் சைக்கிளில் ஏறி பானாவரம் பக்கம் சென்று விட்டதாகவும், மேற்படி கடையில் இருந்த பணம் ரூ. 42,360/- ஐ பறித்து சென்றதாகவும் கொடுக்கபட்ட புகாரின் பேரில் நெமில் காவல் நிலைய குற்ற எண். 45/2024 சட்ட பிரிவு 392 இ.த.ச வின் படி வழக்கு பதிவு செய்து இவ்வழக்கானது பாரி குற்ற வழக்கு என்பதால் காவல் ஆய்வாளர் பானாவரம் வட்டம் அவர்கள் பார்வைக்கு வைத்துக்கொண்டேன். இவ்வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை **அதசாஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் 1, 2 மற்றும் 4 தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை மட்டுமே நான் பதிவு செய்தேன். எதிரிகளிடமிருந்து நான் எந்த வழக்கு சொத்தையும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் விசாரணை காவல் ஆய்வாளருடையது. என்னிடம் கொடுக்கபட்ட புகாரில் சம்பவம் மாலை 07.00 அளவில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் புகார் தாரர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் இரவு 11.30 மணி என்று சொன்னால் சரிதான்.

காவல் நிலையத்திற்கும் மதுபானக்கடைக்கு இடையே 1 கி.மீ என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததற்கும் புகார் தாரர் புகார்

கொடுத்த நேரத்திற்கும் இடையே 4 மணி நேரம் இடைவெளி உள்ளது என்று சொன்னால் சரிதான். கால தாமதத்திற்கான காரணத்தை நான் புகார் தாரரிடம் கேட்டு பதிவு செய்யவில்லை என்று சொன்னால் புகார்தாரரை கேட்டதில் அவர் அவருடை உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்து பிறகு வந்ததால் காலதாமதம் ஆனது என்றார். புகார் தாரர் காவல் நிலையம் ஆஜராகி தட்டச்சு செய்து புகாரை கொடுத்தார்.

இந்த வழக்கிற்காக ஒரு பொய்யான புகாரை காவல் நிலையத்தில் தயார் செய்து புகார் தாரரிடம் கையொப்பம் பெற்று ஒரு பொய்யனா முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்தள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையை பதவு செய்தது தவிர வேறு எந்த விவரமும் எனக்கு தெரியாது என்று சொன்னால் காவல் ஆய்வாளருடன் நான் வழக்கு சம்பவத்திற்ககாக நான் உடன் சென்றேன்.

என்னுடைய வாக்குமூலத்தில் மேற்படி விவரத்தை எந்த இடத்திலும் கூறவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை.

**<u>எதிரிகள் 3, 5 மற்றும் 6 தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை மட்டுமே நான் பதிவு செய்தேன். எதிரிகளிடமிருந்து நான் எந்த வழக்கு சொத்தையும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் விசாரணை காவல் ஆய்வாளருடையது. என்னிடம் கொடுக்கபட்ட புகாரில் சம்பவம் மாலை 07.00 அளவில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் புகார் தாரர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் இரவு 11.30 மணி என்று சொன்னால் சரிதான்.

காவல் நிலையத்திற்கும் மதுபானக்கடைக்கு இடையே 1 கி.மீ என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததற்கும் புகார்தாரர் புகார் கொடுத்த் நேரத்திற்கும் இடையே 4 மணி நேரம் இடைவெளி உள்ளது என்று

சொன்னால் சரிதான். காலதமாதத்திற்கான காரணத்தை நான் புகார் தாரரிடம் கேட்டு பதிவு செய்யவில்லை என்று சொன்னால் புகார்தாரரை கேட்டதில் அவர் அவருடை உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்து பிறகு வந்ததாதல் கால தாமதம் ஆனது என்றார். புகார் தாரர் காவல் நிலையம் ஆஜராகி தட்டச்சு செய்து புகாரை கொடுத்தார்.

இந்த வழக்கிற்காக ஒரு பொய்யான புகாரை காவல் நிலையத்தில் தயார் செய்து புகார் தாரரிடம் கையொப்பம் பெற்று ஒரு பொய்யனா முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையை பதவு செய்தது தவிர வேறு எந்த விவரமும் எனக்கு தெரியாது என்று சொன்னால் காவல் ஆய்வாளருடன் நான் வழக்கு சம்பவத்திற்ககாக நான் உடன் சென்றேன்.

என்னுடைய வாக்குமூலத்தில் மேற்படி விவரத்தை எந்த இடத்திலும் கூறவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை.

**<u>மறு விசாரணை</u> :** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.07 19:25:40 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.